tamilguru.lk

## தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## தென் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025

01.0 தென் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIஇல் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை , தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2025 அக்டோபர் மாதத்தில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத் தரப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவத்தை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.sp.gov.lk இணையதளத்தில் பிரசுரித்துள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) மூலம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2025 செப்டெம்பர் 01ஆம் திகதி ஆகும்.

**குறிப்பு** - இணைய வழி மூலம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2025 ஆகஸ்ட் 11ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2025 செப்டெம்பர் 01ஆம் திகதி பி.ப. 11.59 மணிக்கு முடிவடையும்.

இப் பரீட்சையை 01ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டும் நடாத்தப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் குறித்த அட்டவணைக்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தை தேர்ந்தெடுக்க வேண்டியதுடன், இணையவழியில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்கையில் பரீட்சையில் தோற்றிட எதிர்பார்க்கின்ற நகரத்தை அட்டவணை 01 ற்கமைய சரியாக குறிப்பிட வேண்டும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகரத்தை பின்னர் மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்க மாட்டாது.

02.0 தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூல சோதனையின் பெறுபேறுகளுக்கமைய திறன்களின் மீது தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIஇல் பதவிகளுக்காக நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்படுவர்.

03.0 (அ) பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 143 ஆகும்.

(ஆ) நியமனம் செய்யும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் நாளை நியமன அதிகாரியினால் உறுதிபடுத்தப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(இ) அரச சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலக்கம் 192 மற்றும் 2014.09.11 திகதியிட்ட தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட தென் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - தொழில்நுட்பமல்லாத - பல்நோக்கு தொகுதி 1ன் சேவைப் பிரிவிற்கான ஆட்சேர்ப்பு செய்யும் விதிமுறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அந்த விதிமுறைக்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக்கொவையில் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள்/தென் மாகாண நிதி விதிகளின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 திகதியைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் IIIஆம் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவர்.

(ஈ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் குறைந்த பட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும். எவ்வாறெனினும் நியமன அதிகாரியினால் முடிவு செய்யப்படும் ஏதேனும் விசேட காரணங்கள் மீது அக் காலத்தை முடிவடைவதற்கு முன் ஒரு உத்தியோகத்தரை இட மாற்றம் செய்வதற்கு தேவைப்படுமாயின், நியமன அதிகாரியிடம் அதற்கான அதிகாரம் உண்டு.

(உ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்து மூன்று (03) வருடங்களுக்கள் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டற் பரீட்சையை சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் நீர் நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய தாங்களால் ஏற்புடையவாறு அரச கரும மொழி தெர்ச்சியை பூர்த்தி செய்தல் வேண்டும்.

04.0 2025.03.25 திகதியிட்ட இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN 02 – 2025 சம்பளக் குறியீடு இப் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கு ஏற்புடைய சம்பளத் திட்டம் ரூபா. 48,470-10 x 540-11 x 630-10 x 1,010- 10 x 1,190 - 82800/- ரூபா ஆவதுடன் அச் சமபளம் தங்களுக்க உரித்தாவது 2027.01.01ஆம் திகதியிலிருந்தாகும். நியமனம் நடைமுறையாகும் திகதியிலிருந்து தங்களுக்கு அச் சுற்றறிக்கையில் IIIஆம் அட்டவணையில் ஏற்பாடுகளின் படி சம்பளம் வழங்கப்படும்.

05.0 இப் பதவி நிறந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையதாகும். இப் பரீட்சையால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கட்டுப்படுதல் வேண்டும்.

06.0 **தகைமைகள்** : முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் IIIஇல் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 2025.09.01ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2007.09.01ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1995.09.01ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியை அமைந்தவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமைகள் உண்டு.

(இ) சிறந்த நன்நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து பரீட்சார்த்திகளும் தென் மாகாணத்துக்குள் எந்தவொரு பிரதெசத்திலும் பணி புரிவதற்கும் , பதவியின் பணிக்கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(உ) பின் வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரு அமர்விலே ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீடசையில் சிதிதியடைந்திருத்தல்.

மற்றும்

2. கல்விப் பொதுத்தராதர (உயர்த்தரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களையும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு –

- கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீடசையில் திறமை சித்தியைப் பெற்றிருக்க வேண்டிய மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரி இப் போட்டிப் பரீட்சையில் தோற்றும் மொழி மூலமாகும்.
- கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர (உயர்த் தரப்) பரீடசைக்கு சமமான வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கல்வி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையொன்றில் தோற்றுவிட்டு பெற்றுக்கொண்டுள்ள தகைமையை நியமனத்தை வழங்குவதற்காக ஏற்புடையதாக்கிக்கொள்ளல் தொடர்பான இறுதி தீர்மானம், ஏற்புடைய கல்வி நிறுவனங்களால் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உறுதிபடுத்திக்கொள்வதன் பின்னர் நியமன அதிகாரியினால் எடுக்கப்படும்.

**கருத்திற் கொள்ள வேண்டும்.** – அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவியுடன் தொடர்புடைய அனைத்த தகைமைகளையும் 2025 செப்டெம்பர் மாதம் 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானது.

**07.0 மவட்ட சனத்தொகை விகிதத்தின் மீது தேர்ந்தெடுத்தல்.**

(அ) அட்டவணை 01இல் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பதாரர்களால் தாங்கள் வெற்றிடங்களுக்காக போட்டியிட தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டத்தை இணையவழி மூல விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது சரியாக குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) சேவையில் ஆட்சேர்ப்பு செய்தல் பிரதிநிதித்துவ ரீதியின் அடிப்படையில் செய்யப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்ட மக்கள் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக, அந்த ஒவ்வொரு மாவட்டத்திற்காக குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையின் அளவை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களுக்காக போடடியிட தகுந்தவர்களாவது அம் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே.

I. ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேல் குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களால் நிரப்ப முடியாத பட்சத்தில் அவ் வெற்றிடங்களின்

எண்ணிக்கையை அருகிய மாவட்டங்களுக்கிடையில் அந்த மாவட்டங்களின் மக்கள் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக மீண்டும் விநியோகிக்கப்படும்.

II.பரீட்சையில் குறைந்த பட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை ஒதுக்கியுள்ள வெற்றிட எண்ணிக்கையை விட குறையும் போது மாவட்ட சனத் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் செய்யப்படமாட்டாது.

**கருத்திற் கொள்ள வேண்டும்.** – மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்கள் என்று பொருள்படுத்தப்படுவது அந்த மாவட்ட சனத் தொகைக்கு விகிதமாக அம் மாவட்டத்தில் இருந்து போட்டிப் பரீட்சையில் தோற்றப்படும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படும் வெற்றிட அளவாவதுடன் அந்த நிர்வாக மாவட்டத்துக்குள் இருக்கின்ற அரச நிறுவனங்களிலுள்ள சேவையில் வெற்றிட எண்ணக்கையல்ல என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

(இ) மாவட்டத்திற்கு உரித்தாவதற்காக இருக்க வேண்டிய தகைமைகள் :

(i) பரீட்சைக்கான தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதி திகதிக்கு முந்திய ஐந்து (05) வருடங்களுக்குள் அவர் அந்த மாவட்டத்திற்குள் குறைந்தது மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியாக நிறந்தர வதிவினைகொண்டவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) திருமணத்தின் காரணத்தால் தென் மாகாணத்திற்கு வதிவிடம் மாறியுள்ள விண்ணபதாரர் ஒருவர் என்றால், பரீட்சைக்கான தகைமைகளை பூர்த்திசெய்ய வேண்டியுள்ள இறுதி திகதிக்கு முன் , திருமண நாளிலிருந்து வாழ்க்கைத்துணையாளரின் வதிவு தென் மாகாணத்தில் 03 பஞ்சாங்க ஆண்டுகள் கடந்த காலத்திற்கு இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** – எந்தவொரு பரீட்சார்த்திக்கும் ஒரு மாவட்டத்தை விட கூடுதலான வெற்றிடங்களுக்காக போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டாது. இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கையில் மேல் 7இல் குறிப்பிட்ட தகைமைகளுக்கமைய தாங்கள் வெற்றிடத்திற்காக போட்டியிட மாவட்டத்தை தேர்ந்தெடுத்த பின்னர் அதை மீண்டும் மாற்ற முடியாது.

08.0. இப் போட்டிப் பரீட்சையின் மூலம் பூர்த்தி செய்யவுள்ள வெற்றிட எண்ணிக்கையில் 3% ஐ மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமைகள் பெறும் மாற்றுத்திறனாளிகளில் கூடிய புள்ளி மட்டமத்தில் 3% வீதத்தை மட்டும் திறன் ஒழுங்குமுறைக்கமைய நியமனங்களை வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தகைமைகளைப் பெற பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தது நாற்பது சதவீதமாவது (40%) பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ளல் வேண்டியதுடன் பரீட்சையில் மொத்த புள்ளிகளில் குறைந்தது ஐம்பது சதவீதமாவது (50%) பெற்றுக்கொள்ளல் வேண்டும். பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/88 இல் ஏற்பாடுகள், மாற்றுத்திறனாளர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஏற்புடையதாகும்.

குறிப்பு - இணையவழி விண்ணப்பங்களை பூர்த்தி செய்கையில் ஏற்புடையவாறு தாங்கள் மாற்றுத்திறனாளர் நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பம் செய்கின்றமையை குறிப்பிட வேண்டியதுடன் மாற்றுத்திறனாளராகாத ஒருவர் பொய்யானதாக மாற்றுத்திறனாளர் என குறிப்பிடத்தகாது.

09.0 பரீட்சைத் திட்டம் :

(அ) இப் பரீட்சை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தங்களுக்கு ஏற்புடைய ஒரு மொழி மூலத்தை தேர்ந்தெடுத்தல் வேண்டியதுடன் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்காகவும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

| தொடர் இலக்கம் | பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 01 | மொழித் திறன் | 100 | 2½ மணித்தியாலங்கள |
| 02 | உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் |

(01) **மொழித் திறன்** :

இவ் வினாத்தாள், பரீட்சார்த்திகளின் கருத்து வெளிப்பாட்டு, புரிந்துணர்வு,எழுத்திலக்கணம், மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்ட கடிதமொன்றை வரைவுதல், வழங்கியுள்ள தரவுகளுக்கமைய வரைபட அட்டவணைகளை தயாரித்தல், தரப்பட்ட வாசகத்தை சுருக்கி எழுதுதல், தரப்பட்ட வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் இலகுவான இலக்கணங்களைப் பாவித்தல் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் குறிக்கோளான வினாக்களை கொண்டுள்ளது.

(02) **உளச்சார்பு** :

இவ் வினாத்தாள் பரீட்சார்த்திகளின் எண்ணியலான திறன்கள், தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், சாதாரண நுட்பத்தை அளவிடும் வகையில் தயாரிக்கப்படும் குறிக்கோளான வினாக்களை கொண்டுள்ளது.

**குறிப்பு** : பரீட்சாத்தியின் கடமை பொறுப்புகளுக்கான தகைமைகள் மற்றும் திறமைகளை பரிசோதிப்பதன் பொருட்டு இவ் வினாத்தாள்களை தயாரிக்கப்படும். எழுத்து மூல விடைத்தாள்கள் அனைத்தையும் தொடர்பாக தெளிவான கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்திலக்கணத்தை தொடர்பான பிழைகள் தொடர்பாக புள்ளிகளை குறைக்கப்படும்.

(ஆ) இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனங்கள் பெறுவதற்காக பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தது நாற்பது சதவீதமாவது (40%) பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ளல் வேண்டியதுடன் பரீட்சையில் மொத்த புள்ளிகளில் குறைந்தது ஐம்பது சதவீதமாவது (50%) பெற்றுக்கொள்ளல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெறிறடங்களை பூர்த்திசெய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை உறுதியாக கடைப்பிடித்துக்கொண்டு நியமனங்கள் வழங்கப்படும்.

(இ) **பரீட்சைப் பெறுபேறுகள்** : தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.psc.sp.gov.lk மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனிப்பட்டரீதியில் பார்த்துக்கொள்ள முடிகின்றவாறு பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தயடைந்த

விண்ணப்பதாரர்களின் மாவட்ட திறன்களின் ஒழுக்குமுறைக்கமைய தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலொன்றை நியமன அதிகாரியிடம் வெளியிடப்படும்.

10.0 **பரீட்சைக் கட்டணங்கள்** : பரீட்சைக் கட்டணம் 1,000.00 ரூபாவாகும். இணையவழியாக (online) பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும். அனைத்து கட்டணங்களையும் VIZA அல்லது MASTER அட்டைகள் மூலம் மட்டும் செலுத்த வேண்டியதுடன் அதை தவிர்ந்து ஏனைய முறைகள் மூலம் செய்யப்படும் கட்டணங்களை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சை கட்டணத்திற்கான மொத்த பணத்தையும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பங்களை நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிட்ட கட்டண முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறைப்பாடுகள் தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பு கூற மாட்டாது.

எக் காரணத்திற்கொண்டும் பரீட்சைக் கட்டணத்தை மீள செலுத்தப்படமாட்டாது என்பதையும் அக் கட்டணங்கள் வேறு எந்தவொரு பரீட்சைக்காகவோ மாற்றீடு செய்ய இடம் தர மாட்டாது என்பதையும் கருத்திற்கொள்ளல் வெண்டும்.

**குறிப்பு** - விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் இறுதி திகதியை வரை தாமதம் செய்வதால் ஏற்படும் பாதகமான நிலைகளை விண்ணப்பதாரர்களால் பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

11.0 **விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்குமுறை** :

அனைத்து விண்ணப்பதாரர்களும் www.psc.sp.gov.lk என்ற தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையதளத்திற்குள் உற்பிரவேசித்து பரீட்சையை சரியாக தேர்ந்து, ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் (submit) வேண்டும். இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை 2025 செப்டெம்பர் 01ஆம் திகதி பி.ப. 11.59 மணியில் முடிவடையும். ( இதற்காக இணையதள வசதிகளுடனான desktop அல்லது laptop கணனிகளை பாவித்தல் மிகவும் பொருத்மாகும்.)

11.1 விண்ணப்பதாரர்களால் இப் பரீட்சைக்கான தங்களது விண்ணப்பப்படிவத்தை இணையவழி மூலம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.2 விண்ணப்பதாரர்களால் உள்ளடக்கிய எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்ய இடம் தர மாட்டாது. ஆகையால் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு (submit) முன் நன்கு பரிசோதிப்பது மிகவும் முக்கியமாகும்.

11.3 வேறு முறைகளில் சமர்ப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். இணையவழி மூலம் இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கையில் தவரான பரீட்சையை தேர்ந்தெடுப்பது போன்ற தவறுகைகளால் ஏற்படும் இழப்பினை தாங்களாகவே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேணடும்.

11.4 எவ்விதத்திலும் விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதிகளை இவ் ஆணைக்குழுவிடம் அனுப்பத்தகாது. எனினும் பூர்த்தி செய்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்வசம் வைத்திருப்பது கட்டாயமாவதுடன் அதை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11.5 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுபடுத்தல் :**

நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்படும் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதியில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்று படுத்திருத்தல் வேண்டும். ஏதேனும் அரச நிறுவனமொன்றால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும் அவ்வாராகாத விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை தலைவர்/ ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர் / பிரிவின் கிராம உத்தியோகத்தர் / சமாதான நீதவான் /சத்திய பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு /முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /அரச அல்லது மாகாண அரச சேவையில் நிறந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையில் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது பிற மதத்தின் வணக்கஸ்தளத்தை பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியைக்கொண்ட ஒருவரினால் சான்றுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

12.0 **அனுமதி அட்டை :**

இணையவழி மூலம் விண்ணப்பங்களை கோருகின்ற படியால், தகைமைகளை பரிசோதித்தலின்றி, அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்று ஊகித்தலின் மீது உரியவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன் எல்லா விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களை இணையவழி மூலம் சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இத் திறந்த போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்க்கு தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால், உத்தியோகபூர்வ இணையதளமான www.psc.sp.gov.lk ஊடாக இணையவழியில் அனுமதிப்பத்திரங்களை வெளியிடப்படும். அனுமதிப்பத்திரங்களை வெளியிட்ட உடனே அதனை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வ இணையதளத்தில் அறிவித்தலின் மூலம் பிரசித்திபடுத்தப்படும். அதற்கமைய இணையதளத்திலுள்ள பரீட்சை அனுமதி பத்திரங்களை வெளியிடும் சாரளத்தை அணுகி தமது தேசிய அடையாளட்டை இலக்கத்தை உள்ளிடுவதனால் பரீட்சை அனுமதிப் பத்திரத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ள முடியும்.

அனுமதி அட்டையை பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் ஏற்புடைய நிரலில் திருத்தப்பட வேண்டிய விதத்தை குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் கையொப்பத்தையிட வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகளை கவனத்திற்கொள்ளமாட்டாது.

பரிட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையை வெளியிடுதல், அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதுதல் ஆகாது. பதிவிறக்கம் செய்யப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை ஏ4

அளவிலான தாளின் இரு புறங்களையும் பாவித்தவாறு அச்சிட்டு கையொப்பத்தை சான்றுபடுத்தி மேற்பார்வையளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும் அவ்வாராகாத விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை தலைவர்/ ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர் / பிரிவின் கிராம உத்தியோகத்தர் /சமாதான நீதவான் /சத்திய பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் / அரச அல்லது மாகாண அரச சேலையில் நிறந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையில் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது பிற மதத்தின் வணக்கஸ்தளத்தை பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியைக்கொண்ட ஒருவரினால் சான்றுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

13.0 **பரீட்சைக்கு அனுமதித்தல்** :

(அ) பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரிகளால் தங்களத கையொப்பத்தை சான்றுபடுத்திக்கொண்ட அனுமதி அட்டையை முதன் முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் பரீட்சை நாளில் அங்கு பரீட்சை நிலைய பொறுப்பான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சையில் தோற்றும் அனுமதி கிடைக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

14.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** :

அனுமதி அட்டையில்லா எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் தோற்றும் வாய்ப்பு கிடைக்கப்படாது. மேலும் , விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்கள் தோற்றப்படும் அனைத்து வினாத்தாள்களுக்காகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிருபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய அடையாளட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்த கூடியவாறு முகத்தை மற்றும் மின்னணு தொடர்பு சாதனங்களை அணியாதமை உறுதிபடுத்துவதற்காக இரண்டு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் உற்பிரவேசித்தல் வெண்டும். அவ்வாறு தங்களது அடையாளத்தை உறுதிபடுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15.0 **தேர்ந்தெடுக்கும் முறைமை** : - இப் பதவிகளுக்காக பரீட்சையில் காட்டிய திறன்கள் மற்றும் மாவட்ட சனத்தொகையின் விகிதத்திற்கமைய தகைமைகளை பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையின் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) பின்னர் தகைமையுள்ளோரை தேர்ந்தெடுக்கப்படும். ( நியமனங்கள் வழங்கும் போது இருக்கும் வெற்றிடங்களுக்கமைய நியமனங்களை வழங்கவேண்டிய இறுதி முன்னணி மட்டத்த்தில் சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் சிலபேர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சை ஒன்றை நடாத்தி கலிவித் தகைமைகளுக்கமைய மேலான தகைமைகள் உடையோர் ஒழுங்குமுறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.)

16.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்** : இப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமையில்லை என்பதை தெரியவருமாயின் பரீரசைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போதே அல்லது பரீடசைக்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு தென் மாகாண அரசார்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. மேலும் , ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தகவல், பொய்யானதென தெரிந்தே சமர்ப்பிதுள்ளாரென தெரியவருகையில் அவர் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

(i) விண்ணப்பத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக துல்லியமான தகவல்களை வழங்கல் வேண்டும். இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிமுறைகளுக்கமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் அதற்கு தோற்றுவதற்கு தகாதவர்கள் என்று தெரிய வந்தால், பரீரட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போதே அல்லது பரீடசைக்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு இவ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

(ii) பரீட்சார்த்தி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானதென பிற்காலத்தில் தெரியவந்தால் அவரால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு காரணத்தை மூடிமறைத்துள்ளாரென வெளிபடையானால் அவருக்கு நியமனத்தை வழங்குவது தொடர்பில் இனி மேலும் கவனத்திற்கொள்ளமாட்டாது. அத்துடன் இப் பரீட்சை காரணமாக்கிக்கொண்டு வழங்கியுள்ள நியமனத்தை இரத்து செய்ய அல்லது அரச சேவையில் இருந்து பணி நீக்கம் செய்யப்படவும் உட்படுவார்.

17.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கு பரீட்சை பரீட்சார்த்திகள் உட்படுவர். அச் சட்டத்திட்டங்களை மீறினால் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டணைக்கும் உற்படுவதற்கு அவருக்கு நேரும்.

18.0 பரீட்சையை நடாத்துதல், பரீட்சையை இரத்துச்செய்தல் அல்லது பரீட்சைப் பெறுபேறுகளை இடைநிறுத்தல் மற்றும் அதற்கு இடைநேர் விளைவாக பரீட்சை அறிவிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத வேறு ஏதேனும் விடயத்தை தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முடிவு இறுதி முடிவாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட பொது பரீட்சை சட்டத்திட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளனர்.

19.0 இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முறண்பாடு ஏற்பட்டால் , அப்போது சிங்கள மொழி வாசகமே மேலோங்குதல் வேண்டும்.

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

சீ.பீ.ராஜகருணா
செயலாளர்
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

C.P. Rajakaruna
Secretary
Provincial Public Service Commission
Southern Province

2025 ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி,
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
06ஆம் மாடி,
மாவட்ட செயலகம்,
காலி.

( இவ் அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் போலியாக தயாரித்து சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு எவ்வித போறுப்பும் ஏற்றுக்கொள்ளாது)

அட்டவணை 1

| இலக்கம் | மாவட்டம் | நகரம் |
|---|---|---|
| 01 | காலி | காலி |
| | | அம்பலாங்கொட |
| | | பத்தேகம |
| 02 | மாத்தறை | மாத்தறை |
| | | அக்குரெஸ்ஸ |
| 03 | ஹம்பாந்தோட்டை | தங்காலை |
| | | ஹம்பாந்தோட்டை |